# பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்

# (Feminist though in Bharathiyar Works)

**ஆய்வாளர்**
நா.ரஹமத் நிஷா
முதுகலை தமிழ் இலக்கியம்
இரண்டாம் ஆண்டு,
சக்தி மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்

**நெறியாளர்**
முனைவர்.க.மலர்விழி
MA., M.Phil., B.Ed., Ph.
உதவி பேராசிரியர்,
சக்தி மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்.

**ஆய்வு சுருக்கம்**

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கின்ற ஒருகூட்டமைப்பே சமுதாயமாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல் அமைப்பை தவிர வேறு எந்த விதத்திலும் வேறுபாடுகள் இல்லை. குழந்தைப் பிறந்து வளரும் காலங்களில் சமூகம் பல வழிகளில் பல காரணங்களால் வேறுபடுத்தப்படுகிறது. பெண்களுக்கு பல உரிமைகள் மறுக்கப்பட்டது. அதை எதிர்த்து பலர் பெண் விடுதலைக்காக பாடுபட்டனர். அதில் பாரதியார் முக்கியமானவராக கருதப்படுகிறார். அவரின் பெண் விடுதலைக் குறித்த கருத்துக்களே ஆராயப்படுகிறது.

**திறவுச் சொற்கள்**

பெண்ணியம் , பெண் புரட்சி, பெண் அடிமை, பெண் விடுதலை,புதுமைப்பெண்

**முன்னுரை**

பெண்ணியம் என்பது கோட்பாடு மற்றும் கருதுகோளின் அடிப்படையில் ஏற்பட்ட சொல்லாகும். பெண்ணியம் என்பது பண்பு நலன்களை சுட்டிக்காட்டி இச்சொல் நாளடைவில் உரிமைகளை பெற பயன்பட்டது. பெண்ணியம் என்னும் சொல் வழக்கிற்கு வரும் முன்னே பெண்மை, பெண் உவமை என்பன போன்ற சொற்கள் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. பெண்மைக்கும், பெண்ணியத்திற்கும் மிக ஆழ்ந்த வேறுபாடுகள் உண்டு. பெண்களின் விடுதலை சித்தாந்தமே பெண்ணியம் ஆகும்.

இப்பெண்ணியம் பற்றி மகாகவி பாரதியார் பெண்ணியச் சிந்தனைகளைக் கூறுவதே இந்த பெண்ணியச் சிந்தனை கூறாக அமைந்துள்ளது.

**பெண்ணியம்**

பெண்மை என்பது பெண்ணின் செயல் மற்றும் பண்பின் அடிப்படையில் உருவானவை ஆகும். கற்புடைய பெண்களின் தனிபெரும் சொத்தாக, பலமாக உருவகிக்கப்பட்டு அதற்கேற்ப கண்ணகி, நளாயினி, சீதை போன்ற கற்புக் கதைகளும் உருவாக்கப்பட்டன. இந்த கற்புத் தன்மைக்குச் சமூகம் அடையாளப்படுத்தும் வாழ்வை விடுத்து பெண்கள் மீதான வரலாறு, மதம், பொருளாதாரம் மற்றும் சமய மொழி ஆகியவற்றில் பெண்களின் பங்கை விளக்கி அதன் ஒடுக்கு முறைகளில் அகநிலை உண்மைகளை ஆராய்ந்து, அதன் பரிமாணங்கள் அதற்கான தீர்வுகள் அதை அடைவதற்கான விதிமுறைகள் ஆகியவற்றை ஆராய்வது பெண்ணியம் எனப்படும்.

**பெண்புரட்சி**

பாரதி புதுமைப்பெண் உருவாகிடவும், பெண் விடுதலையை வேண்டியும் புரட்சிப் பாடல்களைத் தன்கவிமாலையில் தொடுத்தவர். இதை,

“மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா”

என்று கவிமணி பாடிய பாடலுக்கு ஏற்ப இந்த உலகில் பெண்களாக பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என்று இவ்வுலகிற்கு எடுத்துக் கூறியுள்ளார்.

**பெண் அடிமை**

ஒவ்வொரு ஆணும் பெண்கள் அடிமை என்பதை ஆணித்தனமாக நினைத்து பெண்கள் எல்லாம் ஆமைகளாய் ஒடுங்கிப் போய்விட்டார்கள். இதனை,

“மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக

வாழ்விழந்த நாட்டிலே”

என்ற பாரதியாரின் இவ்வடிகள் பெண்ணடிமை ஒழிய வேண்டும் என்றும், ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக விளங்க வேண்டும் என்றும் விளக்குகிறார்.

பெண்ணை ஒரு போகப் பொருளாகவும், வர்ணனைக்கு மட்டுமே உகந்தவளாகவும் கவிஞர்களுக்கு மத்தியில் பெண்ணின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுத்தவர் பாரதியார்.

**பாரதியார் காட்டும் பெண் விடுதலை**

பாரதியார் பெண் விடுதலைக்காக நாட்டுப்புறப் பாடல்கள் போல் கும்மி பாட்டு பாடி பெண்களை விழிப்படையச் செய்கிறார். இதனை,

“கும்மியடி தமிழ்நாடு முழுவதும்
குலுங்கிட கைகொட்டிக் கும்மியடி
நம்மை பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணே பூட்டி வைப்போம்
விந்தை மனிதா தலைக்கவிந்தார்”

என்னும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் பெண்களின் விடுதலைக்காக நம்மை பிடித்த அடிமை பிசாசுகள் போய்விட்டன என்றும், பெண்கள் ஏட்டுக்கல்வி தொடுவது தீமை என்று சொல்கிறவர்கள் மாய்ந்து விட்டதாகவும், வீட்டுக்குள் பெண்ணை பூட்டி வைக்க வேண்டும் என்று கூறிய விந்தை மனிதரெல்லாம் தலைக்கவில வேண்டும் என்றும் பாடியுள்ளார்.

**பெண் விடுதலைக்காக பாரதியார் இட்ட கட்டளைகள்**

1. பெண்களைப் பருவம் செய்வதற்கு முன்பு மணம் செய்து கொள்ளக்கூடாது.
2. அவர்களுக்கு விருப்பமில்லாத ஒருவனை திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது.
3. திருமணம் செய்து கொண்ட பிறகு அவர் கணவனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும் அதன் பொருட்டு அவனை அவமானப்படுத்தக் கூடாது.
4. சொத்தில் பெண் குழந்தைகளுக்கு சரிபாதி கொடுக்க வேண்டும்.

5. திருமணமே புரிந்து கொள்ளாமல் தனியாக இருந்து தொழில் செய்து வாழ விரும்பும் பெண்களை தொழில் புரிய இடம் கொடுக்க வேண்டும்.
6. பெண்கள் கணவனைத் தவிர வேறு எந்த ஆணுடனும் பேசக்கூடாது என்ற நிபந்தனைகளை ஒழித்து விட வேண்டும்.
7. பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லா கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும். தாய் திருநாட்டிற்கும் விடுதலை வேண்டும்.
8. தகுதியுடன் அரசாட்சியில் எவ்வித பதவிகள் பெற விரும்பினாலும் அதை சட்டம் தடுக்கக்கூடாது.

பெண்விடுதலை பெறவேண்டுமானால் அவர் விழிப்புணர்வு பெற வேண்டியது முதல் தேவை. விழிப்புணர்வு என்பது கவனத்துடன் செயல்படுவதற்குரிய அறிவைக் குறிக்கும். அதனால் பெண்களிடம் அவர்களுடைய உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தார் பாரதியார். இவ்வுரிமைகள் பெற்றால் சமுதாயம் முன்னேறும் இவ்வுரிமைகளை விரைந்து அளிக்க வேண்டும் என்கிறார்.

**புதுமைப்பெண்**

பெண்களின் மீதான அடக்க முறை மற்றும் ஒடுக்கு முறைகளை ஒழித்து விட வேண்டும் என்ற வேட்கை இங்கே கவிதையாகி இருக்கிறது. இப்பாடலின் முக்கியத்துவம் என்னவென்றால் இந்தியநாடு ஆங்கிலேயர் பிடியில் இருந்தது. இந்த நிலை மாற வேண்டும் என்று விரும்பிய பாரதியார் பெண்கள் விடுதலையே நாட்டு விடுதலை ஆக்குவோம் என்று கூறினார்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லானுக்கிங்கே பெண்
கிளைப் பிள்ளை கானென்றும் கும்மியடி”

என்னும் பாடல் வரிகள் உறுதிப்படுத்துகிறது. அதனோடு இல்லாமல் வற்புறுத்தி திருமணம் செய்து வைப்பது நாயை போல் எண்ணி விற்பது போன்ற வழக்கங்களை எல்லாம் தள்ளி மிதிக்க தன்னால் முடியும் என்று கூறுகிறார் பாரதியின் புதுமைப்பெண். தாய்திருநாட்டிற்கு விடுதலை வேண்டும் என்பதிலும், அதைக் காப்பதில் சேர்ந்து இங்கு உழைப்போம் என சபதம் கூறுவதிலும் தனித்து மிளிர்கிறார். இதை,

“நிமிர்ந்த நன்னடை மேற்கொண்ட பார்வையும்

நிலத்தில் யாருக்கு மஞ்சாத நெரிகளும்
செம்மை மாதா திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து போருளாமறியாமையில்
அவல் மெய்திக் கலையின்றி வாழ்வதே
அமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ”

என்று அறிவுறுத்திச் சொல்கின்றார். பெண்கள் பல அறிவு பெற்ற, நேரிய நெறி பெற்ற நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் பெற்று வருவதால் எத்தகைய தவறும் வராது என்பது உண்மை. இதனை உணர்ந்து நம்நாட்டுப் பெண் மணிகள் நல்வாழ்வு, உரிமை பெற்ற வாழ்வு, ஒத்த வாழ்வு வாழ வேண்டும்.

“தெய்வங்களை வாழ்த்துகிறோம் பெண்களை
வாழ்த்துகிறோம் பெண்கள் இன்பமெய்துக
பெண்மை வாழ்க வெல்க”

என்பதையே லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் மகாகவி.

**தாய்மைப் புரட்சி**

பெண் பிறப்பையே நாயாகக் கருதுகிறதே கேடுகெட்ட உலகம் அவ்வுலகத்துக்கு தாய் அவள் என்று காட்ட

“நாய் என்று பெண்ணை நவீல வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழருக்கு வாழ்த்தவளே”

பெண்களின் மீது அளவு கடந்த மதிப்பு வைத்தவர் பாரதி என்பது கவிதைகளில் திரும்பத் திரும்ப வருகிறது.

**முடிவுரை**

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்ட வேதகாலத்துப் பாஞ்சாலியின் உயர்வு மிக்க வாழ்க்கையை எண்ணி கவிஞர் உள்ளம் பூரிக்கிறது. அறம் பற்றி பேசும் மகாகவி பாரதியார் ஒரு பெண் இந்த தேசத்தை உருவாக்குகிறாள். அவளது குழந்தைகள் தான் இந்த தேசத்தின் எதிர்காலம் என்று நாம் நம்புவோம் என்று பாரதியார் கூறுயுள்ளார்.

